'ஊழ்' உண்மையா?

எழுதியவர்
C. ராஜம்மாள்.

R33
7153

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 - OCT 1954
MADRAS

விலை அணா 6.

மதிப்புரை.

தோழியர் இராஜம்மாள் அவர்களால் எழுதப்பட்ட ஊழ் உண்மையா என்னும் ஒருதர்க்க ரீதியில் எழுதப்பட்ட புத்தகத்தை பார்த்தேன். அதாவது 'ஊழ்' என்னும்சொல்லே தலைவிதி, கர்மபலன் என்னும் கருத்தில் கொண்டு நல்ல வண்ணம் விவாதித்து யாவருக்கும் விளங்கும் வண்ணம் அக்கருத்துக்களை கண்டித்து எழுதப்பட்டிருக்கிறது. அப் புத்தகத்தை கருத்துடன் படித்துப்பார்த்தால் பாமரர்கள் மாத்திரமல்லாமல் பெரும் பண்டிதர்களும் ஜாதகம், ஜோஸ்யம் முதலியவைகளில் பற்றுள்ளவர்களும் கூட, ஊழ் பற்றிய தங்கள் கருத்துக்களில் மயக்கம் அடைந்து விடுவார்கள். யுக்திவாதக் கருத்துக்களும் தெளிவான விளக்கங்களும் கொண்டு விளங்கும் அப்புத்தகத்தை நான் மனப்பூர்வமாய் வரவேற்பதுடன். பொதுமக்களும் வரவேற்று ஒவ்வொருவரும் வாங்கிப் படித்துப் பார்த்து பயனடைய வேண்டுகிறேன்.

(பெரியார்) ஈ. வெ. ரா.

2—4—53

'ஊழ்' உண்மையா?

விதி, தலைவிதி, பிராரப்தம், கர்மா, வினைப்பயன், ஊழ் என்ற பல பெயர்களால் மக்கள் மனதில் ஒரு எண்ணம் வேரூன்றியிருப்பது வெளிப்படை. அவ்வெண்ணத்தைப் பற்றி பல நூல்களிலும் குறிக்கப்பட்டிருக்கிறது. பொது அறிவு கொண்டு சோதித்தால் அவ்வெண்ணத்தைப்பற்றி பல ஐயங்கள் எழுகின்றன. உண்மையாக எழும் சந்தேகங் களினின்றும் விளக்கம் கண்டாலன்றி கொள்கையை ஏற் காத மனஉறுதி கொண்டவர்கள் இந்தப்புத்தகத்தைச் சிறிது படிப்பதுநலம். விதியுண்மைபற்றிக்கூறும் வடமொழி தென் மொழி நூல்களிலிருந்து பல மேற்கோள்களையும் கதைகளையும், பாக்களையும் கொட்டிக் குவித்து ஆரவாரம் செய்து படிப்போரின் பொறுமையைச் சோதிப்பது நம் நோக்கமன்று. பொது அறிவுடைய ஒருவன் அனுபவங் காரணமாக விதியைப்பற்றி ஆராயப் புகுந்தால் எழக்கூடிய சந்தேகங்களுள் முக்கியமான சிலவற்றை மட்டில் குறிப் பிட்டு சிந்தனைச்சுடரை சிறிது தூண்டிவிடுவதே நம் நோக் கம். விதிக்கொள்கைக்கு மாறான ஒரு புதிய கொள்கையை உண்டாக்கும் முயற்சியில் நாம் இடுபடவில்லை.

ஒரு இலக்கியம் புத்தகம் என்ற பெயரால் அழைக்கப் படவேண்டுமானால், அது எத்தன்மையதாகஇருக்கவேண்டும் என்று விவரித்திருக்கும் புகழ்பெற்ற ஆங்கிலப் பெரியா ரான ஜான் ரஸ்கின் என்பவருடைய கருத்துக் கொண்டு பார்த்தால் இது ஒரு புத்தகமாகாது. இது ஒரு பேச்சின் எழுத்துப்பதிவன்றி வேறல்ல.

இந்தியாவில் ஊழை முற்றிலும் நம்புகிறவர்கள் மிகவும் அதிகம் என்பது யாவருமறிந்ததே. அவர்கள் அவ்வூழின் அடிப்படையான வேறுசில கொள்கைகளையும் நம்பியவர் களே. உயிர்த்தொகை எண்ணற்றது; உயிர்வேறு உடம்பு வேறு; உயிர் பல பிறப்புக்களை அடைகிறது; என்பவை அக் கொள்கைகளில் முக்கியமானவை. ஒரு பிறப்பில் உயிர்கள் செய்த செயல்களையும், செய்யாது விடுத்த கடமைகளையும் சோதித்து அளந்து அவைகளுக்குப் பிரதிபலனாகிய இன்ப துன்பங்களை நிச்சயித்து அவைகளை மறு பிறப்புக்களில் அவ்வுயிர்கள் அனுபவிக்கும்படி செய்விக்கும் அல்லது கூட்டுவிக்கும் சக்திதான் ஊழ் என்றும், அது மிகவும் வலி பொருந்தியதென்றும் நம்புகிறார்கள். ஊழின் உண்மை பற்றிக் கூறும் நூல்கள் ஊழின் அவசியம்பற்றியும், ஊழ் எப்படி, எந்த நியாயமுறைப்படி அமைக்கப்படுகின்றதென் பதையும் பற்றி விளக்கம் கூறவில்லை. ஆகையால் மக்கள் மனம் போனபடியெல்லாம் நினைத்துக்கொண்டு துன்பப்படு கிறார்கள்.

மக்கள் செய்யும் தீச்செயல்களையும், நற்செயல் களையும் அளவிடுவதே சாத்தியமில்லாத காரியம். மனிதரின் அறிவு நிலை, மனநிலை, சூழ்நிலை ஆகிய எல்லாம் செயலில் பங்குகொள்ளுகின்றன. இவைகள் எண்ணற்ற வேற்றுமைகளுக்குட்பட்டிருக்கின்றன. மேலும், செய்யும் செயல்களில் பல எதிர்பார்த்த பலனைத் தருகின்றன; பல எதிர்பாராத பலன்களை விளைக்கின்றன; பல பலனை கொடுக் காமல் வீணாகின்றன; பல பின்வருங்காலத்தில் பின் வரும் தலைமுறைகளையும் பாதிக்க வல்லவையாயிருக்கின்றன. இவைகளை யெல்லாம் சீர்தூக்கி நடுநிலைமையுடனும் அறிவுட னும் ஆராய்ந்துதான் வினையின் அளவை நிதானிக்கவேண்

டும். இது சாத்தியமானதா என்பதை நாம்பார்க்கவேண்டும். உதாரணமாக சில குற்றங்களை எடுத்துக் கொள்வோம். திருட்டை ஜாதித் தொழிலாகவோ கூட்டத்தொழிலாகவோ கொண்டதிருடர்கள்பலர்; விரோதத்தைமுன்னிட்டு விரோதியின் சொத்தை திருடுபவர்கள் பலர்; வேறு தொழில் செய்ய வசதியில்லாமல் பிழைப்புக்காக திருடுபவர்கள் பலர்; ஏழைகளுக்கு உதவும் பொருட்டு பணக்காரர்கள் பணத்தைத் திருடுபவர் பலர்; கோவில்கட்டுவதற்காக அரசர் பணத்தைத் திருடினவர் பலர்; இன்னும் எத்தனையோ விதமான திருடர்கள் உண்டு. இவர்கள் எல்லோருடைய திருட்டையும் ஒன்றாகப் பாவிக்கமுடியுமா? கொலையை எடுத்துக் கொண்டால், அடக்க முடியாத கோபத்தால் திடீர் என்று செய்யப்பட்ட கொலை, திருட்டுக்காக செய்யப்பட்ட கொலை, மதவெறியால் செய்யப்பட்ட கொலை, யுத்தத்தில் செய்யப்பட்ட கொலை, தந்தையை தாயைக் கொன்ற கொலை, விரோதத்தில் செய்யப்பட்ட கொலை, வைத்தியர்கள் கவனக் குறைவால் செய்யும் கொலை, காமம் காரணமாகச் செய்யப்பட்ட கொலை, அறியாமையால் நேர்ந்த கொலை இவைகள் எல்லாவற்றையும் ஒரேவிதமாகப் பார்த்து ஒரே விதமான தண்டனைக்குள்ளாக்குவது நியாயமல்லவென் பதை யாவருமறிவார்கள். இவைபோல நல் வினைகளிலும் எண்ணற்ற வேற்றுமைகள் இருக்கின்றன. இடது கைக்குத் தெரியாமல் வலக்கையால் கொடுக்கப்படும் தருமமும், புகழுக்காகச் செய்யப்படும் தருமமும், மதப்புத்தகங்களில் எழுதப்பட்டிருப்பதற்காக மதப்பித்தில் செய்யப்படும் தருமமும், சினேகிதர் சிபார்சுக்காக செய்யப்படும் தருமமும், பாவத்தைப் போக்கிக்கொள்ளுவதற்குப் பயன்படும் என்று நினைத்துச் செய்யப்படும் தருமமும், தன்நிலைக்கு மேற்பட்ட தருமமும், காலமறிந்து பயன்கருதாது செய்யப்பட்ட தரும

மும், ஒன்ருக நினைக்க முடியாது. இவ்விதம் பார்க்குங்கால், எந்தப்பொதுவான நியாயமுறைப்படியும் வினையை அளக்க முடியாதென்றும், ஒவ்வொரு வினையையும் தனித்தனியாக எடுத்துக்கொண்டு, எல்லாவிதமாகவும் ஆராய்ந்தே தீர வேண்டுமென்றும், ஆராய்ந்த பின்னும், முடிவுக்கு வருவது சாத்திய மல்ல வென்பதும் தோன்றுகிறது. கல்வியறிவில் லாத ஒரு மடையனும், கற்ற பண்டிதனும் ஒரே விதமான குற்றம் செய்தால், செயலை நோக்கி குற்றம் ஒன்றென்பதா? செயல் செய்தவரை நோக்கி வேறென்பதா? கற்றவன் குற்றம் மிகுதி யென்ருல், கல்லாமையே நல்ல தென்ருகும். காலமும் வினை விஷயத்தில் வேற்றுமை உண்டாக்குகிறது. ஒரு காலத்தில் உணவுக்காக உயிரைக் கொல்வது குற்ற மாக நினைக்கப்படவில்லை. பின் ஒரு காலத்தில் அது குற்ற மென்று சிலரால் பேசப்படுகிறது. ஒரு காலத்தில் மது பானம் செய்வது குற்றமற்ற தென்று நினைக்கப்பட்டது. இப்பொழுது உலகில் சில இடங்களில் அது குற்றமாக மதிக்கப்படுகிறது. ஒரு காலத்தில் மதத்துக்காக கொலை கூட செய்வதில் குற்றமில்லை யென்று கருதப்பட்டது. இப் பொழுது நேர்மாருக கருதப்படுகிறது. ஒரு காலத்தில் கோவில் கட்டுவது சிறந்த தருமமாக போற்றப்பட்டது; இப்பொழுது பள்ளிக்கூடம் கட்டுவது சிறந்ததாக கருதப் படுகிறது. கேட்பவருக்கெல்லாம் பிச்சை கொடுப்பது தருமமாக ஒரு காலத்தில் கருதப்பட்டது. தகாதவருக்கு கொடுப்பது சோம்பலை வளர்ப்பதாகும் என்று இப்பொழுது கண்டிக்கப்படுகிறது. இவை சில உதாரணங்களே. இன்னும் எத்தனையோ வினைகள் விஷயத்தில் இவ்விதம் காலத்தின் போக்கு மாறுதல்களை உண்டாக்கியிருக்கிறது. ஆகையால் அவ்வினைகளை மக்கள் நிச்சயமாக நல்லவை யென்ருே. தீயவை யென்ருே உள்ளத்தில் உணரவில்லை. அப்படியிருக்

கும் போது அவர்கள் அவ்வினைகளைச் செய்தால் அவர்கள் குற்றங் குணங்களை எப்படி அளவிடுதல் கூடும்?

உணவுக்காக மீன்பிடிக்கப்போன இருவருள் ஒருவனுக்கு ஒரு பெரிய மீன் கிடைத்துவிட்டது; மற்றவனுக்கு பெரிய மீன் கிடைக்காததினால் அனேக சிறிய மீன்களை பிடித்தான். எண்ணிக்கை காரணமாக இரண்டாமவன் செய்த குற்றம் பெரியதா? அல்லது ஒரே காரணத்துக்காக அதே நோக்கத்தில் செய்யப்பட்டதால் ஒத்ததா? யாரால் கூறமுடியும்? எவ்விதம் கூறினாலும் மனிதன் மனத்தில் உள்ள நடுநிலைமை உணர்ச்சி திருப்தியடையுமா? நோய்க்கிருமிகளால் பாதிக்கப்பட்ட ஒருவனுக்கு டாக்டர் ஊசி குத்துகிறார்; கோடிக்கணக்கான கிருமிகள் நாசமாகின்றன. கிருமிகளைக் கொன்ற பாவத்துக்கு டாக்டரை பொறுப்பாளியாக்குவது சரியா? அல்லது டாக்டரை நாடிச் சென்ற நோயாளியைத்தான் அப்பாவம் சாருமா? கிருமிகளைக் கொல்லக்கூடிய மருந்து கண்டுபிடித்தவனைச்சாருமா? இவ்வாறு கோடிக்கணக்கான கிருமிகளை கொல்லக்கூடிய மருந்துகளை சட்டமூலம் தடைசெய்யாதஅரசாங்கத்தாரைச் சாருமா? அல்லது ஒவ்வொருவருக்கும் பகிர்ந்து கொடுக்கப்படுமா? அல்லது கிருமிகளைக் கொல்வது பாவமல்லவென்று ஊழ் கருதுகிறதா வென்றும் தெரியவில்லை. ஒரு யானையைக் கொல்வதும். ஒரு கொசுவைக் கொல்வதும் ஒரு புலியைக் கொல்வதும், ஒரு பசுவைக் கொல்வதும், ஒரு பாம்பைக் கொல்வதும், ஒரு கோழியைக் கொல்வதும் ஊழின் பார்வையில் ஒரே அளவான குற்றங்களா? வேறுபட்டவைகளா? வேறுபட்டவையாயின் எந்த நியாயமுறைப்படி வேறுபட்டவைகள் என்று சொல்லமுடியுமா? ஒரு பசுவுக்குப் புல்லுணவு கொடுப்பதும் ஒரு நாய்க்கு இறைச்சி கலந்த சோறு போடுவதும் ஒரேவிதமான புண்ணியங்களா?

ஒருவன் மற்ருெருவன் மனம் நோகும்படி உதாசீனமாக பேசினுல் அம்மனவருத்தத்தை எந்த அளவையால் அளக்க முடியும்? ஆடுமாடுகளை வெட்டி சில தெய்வங்களுக்கு பலி கொடுக்க வேண்டியது மனிதன் கடமை என்று ஒருவன் ஒரு காலத்தில் எழுதி வைத்து விட்டான்; அதை நம்பி பின்வரும் சந்ததியார்கள் பலி கொடுத்துக் கொண்டே வருகிருர்கள். இப்படி எழுதி வைத்தவனுடைய பாவத்துக்கு அளவு உண்டா என்று கவனிக்கவேண்டும். காலம் செல்லச் செல்ல பலிகள் அதிகரித்துக்கொண்டே இருப்பதால் வினையின் அளவுக்கு முடிவுகட்டி கூறமுடியாமல்போய்விடுகிறது. பலி கொடுப்பவர்கள் தங்களுக்கு விதித்தவண்ணம் தாங்கள் செய்ததாக சொல்லிவிட்டால் அவர்களுக்கு கொலையில் பங்கு இல்லையா? பங்கு உண்டாளுல் எந்த நியாயமுறைப்படி பங்கு பிரிப்பது? இம்மாதிரியாக கவனித்தால் அறம், பாவங்களை, மனிதனின் நடுநிலைமை உணர்ச்சி ஒத்துக் கொள்ளும்படியான முறையில் அளவிடுவது அசாத்தியம் என்று நினைக்கவேண்டியிருக்கின்றது.

அறம் பாவங்களை நிதானிக்கும்போது வினை செய்தவன் நோக்கத்தை கவனிப்பதா, அல்லது அவ்வினையின் முடிவை அல்லது விளைவை நோக்குவதா, அல்லது இரண்டையும் கவனிப்பதா, என்பது மற்ருெரு விஷயம். இதில் எத்தனை கஷ்டங்கள் இருக்கின்றன என்பதை சில உதாரணங்களைக்கொண்டு பார்க்கலாம். திருடிப் பிழைக்கும் ஒருவன் வாய்ப்பு ஏற்பட்ட போதெல்லாம் திருடுகிருன். யாருடைய செல்வ நிலைமையையும், மனோ நிலைமையையும் தெரிந்து கொண்டு பின் திருடவேண்டுமென்று அவன் நினைக்கவில்லை; அவ்விதம் நினைப்பதற்கு வேண்டிய அறிவும், அவகாசமும் அவனுக்கு இல்லை. அவனுடைய திருட்டால் பாதிக்கப்பட்டவரனேகர். ஒரு

வன் பணக்காரன்; அவன் திருட்டைப் பொருட்படுத்தவே இல்லை. மற்றொருவனுக்கு திருட்டு போனதே தெரியவில்லை. மற்றொருவனோ நோய் மிகுந்த மிடியன்; பொருளை இழந்ததை தாங்க முடியாமல் மனம் நொந்து இறந்து விடுகிறான். மற்றொருவன் 'இத்திருடனை கடவுள் மன்னிப்பாராக' என்று பிரார்த்தனை செய்கிறான். திருடன் ஒரே எண்ணத்துடன் செய்த செயல்கள் இத்தனை விதமான வேறுபட்ட விளைவுகளை உண்டாக்கியிருக்கின்றன. இவ்விளைவுகளுக்கு தக்கபடி திருடனை தண்டிப்பது நியாயமா? அல்லது எண்ணத்துக்குத் தக்கபடி தண்டிப்பது நியாயமா? பிறர் குற்றம் என்று சொல்லும் ஒரு காரியத்தை ஒரு மனிதன் குற்றமல்லவென்று உண்மையாக நினைத்துச் செய்தால் அக்காரியத்தை ஊழ் எப்படி அளக்கும்? பாவமா புண்ணியமா என்று நிதானிக்கமுடியாமல் பல செயல்கள் இருக்கின்றன. அவைகளை மனிதன் செய்தே தீரவேண்டிய அவசியமும் இருந்து வருகிறது. அப்படிப்பட்ட செயல்களுக்கு எடைபோடுவதெப்படி. ஒரு விதமான வினை செய்யவும் எண்ணாமல் வாளாவிருப்பவனும் நடந்துபோகும்போது பல உயிர்கள் சாகின்றன. வயலுக்கு நீர்பாய்ச்சுங்கால் பல உயிர்கள் அழிகின்றன. உடலுக்குள்ளும் அனேக உயிரணுக்கள் கணந்தோறும் இறந்துவிடுவதாக அறிஞர்கள் சொல்லுகிறார்கள். எவ்விதம் செய்வது நியாயம், எவ்விதம் செய்வது குற்றமற்றது என்று நிச்சயிக்க முடியாதபடி அனேக சிக்கலான சந்தர்ப்பங்களும் மனித வாழ்வில் சம்பவிக்கின்றன. பல எறும்புகள் ஒரு புழுவை அரித்து தின்றுகொண்டிருக்கின்றன; ரண வேதனையால் புழு துடித்துக்கொண்டிருக்கிறது; இதை பார்க்கும் ஒரு மனிதன் புழுபடும் துன்பம் சகியாது அதை காப்பாற்றினால் அது

பாவமா, புண்ணியமா என்று யாரால் சொல்லமுடியும் புழுவை நோக்கின் அச்செயல் அறமாகவும், எறும்புகளை நோக்கின் அச்செயல் பாவமாகவும் தோன்றும். அந்த மனிதனால் காப்பாற்றப்பட்ட புழு முன்பட்ட ரணவேதனையால் இறந்து, எறும்புகளும் தங்களுக்கு இயற்கையாக ஏற்பட்ட உணவை இழந்ததால் இறந்துவிட்டால் அம் மனிதன் செயலின் தன்மை எப்படிப்பட்டதாக மாறும் என்று யாரும் அளவிட முடியுமா? இப்படி பட்ட சம்பவங்களை தர்ம சங்கடங்கள் என்றும், அவைகளைப் பார்க்கக்கூடாதென்றும், பார்க்கும்படி நேரிட்டால் கண்ணை மூடிக்கொண்டு தெய்வத்தை தியானித்துக்கொண்டு போய்விடவேண்டுமென்றும் ஊழில் நம்பிக்கை உள்ளவர்கள் சொல்லுகிறார்கள். அது சரியானால் ஒரு மனிதனை ஒரு முதலை பிடித்திழுத்துச் செல்வதையும் ஒரு மலைப் பாம்பு ஒரு குழந்தையை கொஞ்சம் கொஞ்சமாக விழுங்கிக் கொண்டிருப்பதையும் கண்ணுறும் ஒருவன் கண்களைப் பொத்திக்கொண்டு போவதுதானே நியாயம்! இது சரியா என்று பார்க்கவேண்டும். மேற்கூறிய உதாரணங்களால் மனிதர் செயல்கள் அளவிடப்படத்தக்கவையல்லவென்று தோன்றும்.

விதிக்கப்பட்ட ஒழுக்கத்தின்படி நடப்பதும் அதை மீறுவதும் புண்ணிய பாவங்களாகும். ஒழுக்க நெறி யாவருக்கும் ஒன்றாக விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த நெறிப்படி நடப்பது செல்வமுடையவர்களுக்கு எளிது என்றும் மிடியர்களுக்கு அரிது என்றும் யாவரும் அறிவர். ஆகையால் ஒழுக்கத்தை ஒரேவிதமாக ஒரு பணக்காரனும் ஒரு ஏழையும் மீறினால் அவர்கள் நிலைமைக்கேற்ப பாவங்களில் கூட்டுதல், குறைத்தல்

செய்யவேண்டியது நியாயம். எந்த அளவு கூட்டுவது, எந்த அளவு குறைப்பது என்று நிர்ணயிப்பது எப்படி? அரசாங்கச் சட்டத்திற்கும் ஊழின் சட்டத்திற்கும் வித்தியாசம் உண்டா என்பது தெரியவில்லை. அரசாங்கம் குற்றம் செய்தவரை தண்டிக்குமேயன்றி நன்மை செய்கிறவர்களுக்கு சன்மானம் செய்வதில்லை; நன்மைகளை பரிசீலனை செய்ய சட்டமும் கோர்ட்டும் அமைக்கவில்லை; செயலுக்கு வராமல் மனத்தினால் மட்டும் செய்யப்படும் குற்றங்களை தண்டிக்க வகை செய்யவில்லை. ஆனால் ஊழின் சட்டம் புண்ணிய காரியத்துக்கு சன்மானம் செய்ய இடங்கொடுப்பதாக சொல்லப்படுகிறது; மனத்தால் செய்யப்படும் பாவ புண்ணியங்களுக்கும் பலன் கொடுப்பதாக சொல்லப்படுகிறது. புண்ணியவான்களைப் பற்றி யாருக்கும் கவலைவேண்டியதில்லை! பாவிகளைப் பற்றித்தான் கவலைப்படவேண்டும். பதினாயிரம் ரூபாய் திருடிய ஒருவனை அரசாங்கச் சட்டம் ஒரு வருஷ கடுங்காவல் தண்டனைக்கு உள்ளாக்குவதாக வைத்துக்கொள்வோம். ஊழின் சட்டப்படி இது குறைவா? அதிகமா? குறைவானால் பாக்கியை ஊழ் கொடுக்குமா? அன்றி அதிகமானால் ஊழ் அதற்கு நஷ்ட ஈடு கொடுக்குமா? ஒரு மனிதனைக் கொன்ற குற்றவாளிக்கும் நூறு மனிதர்களைக் கொன்ற குற்றவாளிக்கும் ஒரே தூக்கு தண்டனைதான் அரசாங்கம் கொடுக்கமுடியும். ஊழின் சட்டம் எப்படியோ? அரசாங்கம் மாற மாற ஊழின் சட்டமும் மாறிக்கொண்டே வருமா? அல்லது பழைய நிலையிலேயே இருக்குமா? ஒரு காலத்தில் பசுங்கன்று ஒன்று தேரில் வந்து விழுந்து இறந்ததற்காக, தேர் செலுத்திய தன் மகனை ஒரு அரசன் கொன்றான். இக்காலத்தில் மோட்டார் விபத்தில் பலர் இறக்கிறார்கள். அரசாங்

கம், மோட்டார் ஓட்டுபவர்களை சொற்ப தண்டனைக்குத் தான் உள்ளாக்குகிறது. ஊழின் சட்டமும் இதை யொத்து திருத்திக்கொள்ளப்படாதா என்பது தெரிய வில்லை. தன்னுடைய சட்டத்தை ஒத்து அரசாங்கமும் சட்டம் செய்யும்படி ஊழ் ஏற்படுத்தியிருந்தால் ஊழுக்கு எவ்வளவோ தொந்தரவு குறையுமே!

பிறப்பினுலேயே சில குணங்களும், சில ஒழுக்கங் களும், சில பழக்கங்களும் மனிதனுக்கு ஏற்படுகின்றன. இவைகள் எல்லாம் அவன் செய்யும் செயல்களில் பங்கு கொள்கின்றன. அதைத் தவிர சமய விதிகள், சமூக விதி கள், சாதி விதிகள், இவைகள் .எல்லாம் மனிதன் மன தைப் பலவிதமாக அமைக்கின்றன. இயற்கையாக ஏற் பட்ட அறிவு விளக்கமும், உணர்ச்சியும், ஆற்றலும் எல்லா மனிதரிடமும் ஒரே விதமாக இல்லை. இவைகளும் மனிதரை பலவாருக ஊக்குவித்தலால், மனிதர் செயலில் இவைகளின் பங்கை குறைத்த பின்னரே தன்னலத்தின் பங்கையும், ஆணவத்தின் பங்கையும் நிதானிக்கவேண் டும். இது சாத்தியமா என்று உணரவேண்டும்.

இனிமேல், வினைத் தீர்ப்பைப்பற்றி சிறிது கவனிப் போம். ஒரு மனிதன் ஒரு நாயை அடித்ததால் மறு பிறவியில் அடிபட்ட நாய் மனிதனுகி, அடித்த மனிதன் நாயாகி அம்மனி தனுல் அடிக்கப்படுவான் என்று ஊழ்க் கொள்கையாளர்கள் சொல்லிக்கொண்டிருப்பார்களானுல் அவர்களிடம் இவ் விஷயத்தைப்பற்றி பேச நினைப்பதே அறிவீனம். ஆனுல் அப்படிப்பட்டவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்து விட்டது. வினையின் தன்மை ஒரு விதமாகவும், தண்டனை யின் விதம் வேறு வகையாகவும் இருக்கக்கூடும் என்று பெரும்பாலோர் நினைக்கிருர்கள். தொட்டால் சுடும் நெருப்

புப்போல, தீவினை செய்பவரை ஊழ் உடனே தண்டிப்ப தில்லை ; கோம்பை நாய் போல் பகிரங்கமாகவும், நேரடி யாகவும் தாக்குவதில்லை. மறைந்திருந்து, காத்திருந்து, சமயம் பார்த்து உயிர்களைப் பிடித்து வதைக்கும் வஞ்சக வேடன் தன்மை ஊழுக்கு அமைந்திருப்பதாகவே ஊழ்க் கொள்கையிலிருந்து தெரிகிறது. எல்லையற்ற பலம் பொருந்திய ஊழ் ஏன் இவ்வாறு மறைந்து செயலாற்ற வேண்டும் ? ஏன் உடன் காலத்தில் குற்றத்தை தண்டி யாது காலம் கழித்து தண்டிக்கவேண்டும் ? குற்றங்களை தடுப்பதில் ஏன் தன் பலத்தை காட்டலாகாது ?

குற்றத்தை அளந்து நிர்ணயம் செய்வது எவ்வளவு அசாத்தியமோ அதேபோல் தண்டனையை நிர்ணயிப்பதும் அசாத்தியமான காரியம். ஒரு பிறவியில் விபசாரம் செய்த வனுக்கு மறுபிறவியில் ஒரு நோயை தண்டனையாக ஊழ் கொடுப்பதாக வைத்துக்கொள்வோம் இது தான் நியாயம் என்று எப்படிச் சொல்ல முடியும் ? ஏன் ஒரு பொருள் நஷ்டத்தை அல்லது கடும் மனவேதனையை தண்டனையாகக் கொடுக்கக்கூடாது ? நோய்த்தண்டனைதான் சரியென்று வைத்துக்கொண்டாலும் ; நோயின் காலம் குறுக்கிடு கிறது. ஆறு மாத நோய் சரியா, அல்லது ஒரு வருட நோய் சரியா, அல்லது தீராத நோய்தான் சரியா என்று தீர்மானிக்க என்ன வகை இருக்கிறது ? ஒரு வருட நோய் சரியென்று வைத்துக்கொள்வோம். மறு பிறப்பில் எப் பொழுது அத்தண்டனையை நிறைவேற்றுவது ? சிறு குழந்தையாக இருக்கும்போது நிறைவேற்றப்பட்டால், அதன் கொடுமையை குழந்தை உணராமல் போய்விடும். நடு வயதில் கொடுக்கப்படுவதாய் வைத்துக்கொள்வோம். தண்டனையின் கொடுமை மற்ற எத்தனையோ காரணங்

களால் கூடவும், குறையவும் இடமிருக்கிறது. இடம், காலம், சூழ்நிலை இவைகள் எல்லாம் இந்த வேற்றுமையை உண்டாக்கக்கூடும். உதாரணமாக ஆஸ்துமா நோயை கும்பகோணத்திலிருந்து அனுபவிப்பதற்கும் கோடைக் கானலிலிருந்து அனுபவிப்பதற்கும் வித்யாசமுண்டு ; வைத் திய வசதியுள்ள இடத்திலிருந்து அனுபவிப்பதற்கும், வேறு இடத்திலிருந்து அனுபவிப்பதற்கும் வித்யாசம் உண்டு. இது போகட்டும். எந்தவிதமான தண்டனையையும், ஒரு பணக்காரனுயிருந்து அனுபவிப்பதற்கும், ஒரு ஏழையாய் இருந்து அனுபவிப்பதற்கும் பேதமுண்டு ; ஒரு அறிவுள்ள வனுயிருந்து அனுபவிப்பதற்கும் அறிவில்லாதவனுக இருந்து அனுபவிப்பதற்கும் பேதமுண்டு ; காளைப்பருவத் தில் அனுபவிப்பதற்கும், முதிர்ந்த வயதில் அனுபவிப்ப தற்கும் பேதம் உண்டு ; உதவிக்கு வேண்டியவர்கள் இருக் கும் இடத்தில் அனுபவிப்பதற்கும் உதவியற்ற இடத்தில் அனுபவிப்பதற்கும் பேதம் உண்டு ; பல வகையில் இன் பம் நிறைந்த காலத்தில் அனுபவிப்பதற்கும், பலவகையில் துக்கம் நிறைந்த காலத்தில் அனுபவிப்பதற்கும் பேதம் உண்டு ; உணர்ச்சி மிக்கவனுயிருந்து அனுபவிப்பதற்கும் உணர்ச்சி குறைந்தவனுயிருந்து அனுபவிப்பதற்கும் பேதம் உண்டு. இப்படி எண்ணற்ற பேதங்கள் ஏற்படச்கூடியதாக இருப்பதால் தண்டனையை நியாயமாக நிர்ணயிப்பது சாத் தியமில்லாத காரியம் என்பது தெரியவரும்.

ஒரு மனிதன் செய்த பாவத்துக்கு தண்டனையாக குட்ட நோய் கொடுக்கப்படுவதாக வைத்துக்கொள்வோம். இவ்வியாதியை அனுபவிப்பவனுக்கு ஏற்படும் வேதனை யைக் காட்டிலும், அவனுக்குப் பக்கத்தில் வசிப்பவருக் குத் தான் வேதனையும், அருவருப்பும் பயமும் அதிகம் ஏற்படுகிறது. அவ்வியாதியஸ்தன் எவ்வளவோ இடத்தை

தினந்தோறும் பாழாக்குகிறான்; எவ்வளவோ குளம் குட்டைகளை ஆபாசப்படுத்துகிறான்; எத்தனையோ பேருக்கு வியாதியை பரப்புகிறான். இதைப் பார்த்தால் குற்றம் செய்தவனை தண்டிக்க ஏற்படுத்தப்பட்ட நோய் அவனளவில் நிற்காமல் மற்றவர்களையும் பாதிக்கவல்லதாக இருக்கும் தன்மை தெரியும். இம்முறை நியாயமாக இருப்பதாக யாரும் ஒப்புக்கொள்ளமுடியுமா; நியாயமாக இருக்கவேண்டுமானால் இந்நோயை பக்கத்திலிருந்து அனுபவிக்கும்படியான ஊழை பலருக்குக் கொடுத்து, அவர்களையும் அந்நோயாளியையும் ஓரிடத்தில் ஊழ் கூட்டி வைத்ததாக வேண்டும். இது சாத்தியமா? அனேகம் வியாதிகள் சந்ததியாரையும் பீடித்து வருவதாக மருத்துவ நூலோர் சொல்லுகிறார்கள். ஒருவன் செய்த பாவத்துக்கு தண்டனையாகக் கொடுக்கப்படும் நோய் நிலைத்து உலகில் வேரூன்றி வளரும்படி செய்வது நியாயமா; இம்மாதிரி நோய் நித்தியமாக இருப்பதற்கு முன்னதாகவே வகை செய்து கொண்டு பின்னால் அந்நோய்க்கு ஆகாரமாக கொடுக்கப்படுவதற்கு தக்கவர்களை ஊழ் தேடித்திரிகிறதா? இதைப் பார்த்தால் தண்டனைக்குத்தான் ஊழ் முதன்மை ஸ்தானம் கொடுக்கிறதென்றும், மனிதனை அது இழிவாகக் கருதுகிறதென்றும் நினைக்க இடங்கொடுக்கிறது. ஒரு பெரிய இயற்கை சக்தி இப்படிப்பட்ட தன்மை வாய்ந்ததாக இருக்குமென்று நம்ப இடமிருக்கிறதா என்று நினைத்துப் பார்க்கவேண்டும். உலகத்திலே எத்தனையோ கொடுங்கோலரசர்களும், அயோக்கிய அரசாங்கங்களும் இருந்து ஆட்சி நடத்தி வந்திருக்கின்றன. எந்த அரசாங்கமும் நோயைத் தண்டனையாக கொடுக்கும்படியான ஈன நிலைக்கு வந்ததாக தெரியவில்லை. நோயுற்ற கைதிகளுக்கும் கூட வைத்திய உதவி செய்ய ஏற்பாடுகள்

செய்திருக்கின்றன. நோயை நிரந்தரமாக போக்கிவிட முயற்சிகள் செய்துவருகின்றன ; ஆராய்ச்சிக் கழகங்கள் ஏற்படுத்தியிருக்கின்றன. தண்டனையிலும் நேர்மை, யோக்யதை, கண்ணியம், நாகரீகம் வேண்டுமென்ற எண்ணம் மனிதரிடையேகூட ஏற்பட்டிருக்கும்போது, மனிதனுக்கு நியாயம் வழங்க ஏற்பட்ட ஊழ்; அவனைப் புனிதப்படுத்தி உயர் நிலைக்கு கொண்டுவர வேண்டுமென்று முயற்சிக்கும் ஊழ், வியாதியை தண்டனையாக கொடுக்கிறதென்று நினைக்கமுடியுமா ? தான் அனுபவிக்கும் நோயையும், தனக்கு வரும் மற்ற நலந்தீங்குகளையும் உணரமுடியாத படி ஒரு மனிதனுக்கு பைத்தியத்தை தண்டனையாக கொடுப்பதில் என்ன அர்த்தம் இருக்கிறது ?

ஒரு மனிதன் ஒரு நாளில் எண்ணற்ற வினைகளை மனத்தாலும், வாயாலும், உடம்பாலும் செய்கிறான். இவைகளுக்கெல்லாம் செய்யப்பட்ட முறைப்படியே தண்டனை கொடுக்கப்படுமா ? முன் பின்னாக கொடுக்கப்படுமா ? எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்து மொத்தமாக கொடுக்கப்படுமா ? எப்படிக் கொடுக்கப்பட்டால் நியாயம் என்று யாரும் சொல்லமுடியுமா ?

தண்டனைகளுள் கொடியவை வறுமையும் நோயுமே யென்பதை எல்லோரும் அறிவார்கள். அவ்விரண்டாலும் மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்டவர்களுங்கூட ஆரம்பத்தில்தான் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். நாட் செல, நாட் செல, கஷ்டங்களைப் பொருட்படுத்தாமல் இருந்து விடுகிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையில்கூட தொடர்ந்து அதே கஷ்டங்களை கொடுத்து வருவதில் என்ன அர்த்தம் இருக்கிறது ?

ஒரு பிறப்பில் செய்த வினைகள் அடுத்த பிறப்புக்கு காரணமாயிருக்கின்றன என்ருல் முதல் பிறப்பை ஆதியில் உயிர் எடுத்தபோது அதற்கு (ஊழ்) முன் வினை ஏது ? மூல தனமாக இருக்கட்டுமென்று கொஞ்சம் வினையை ஊழே அதற்கு தானமாகக் கொடுத்ததா ?

ஒரு பிறப்பை எடுத்துக்கொள்வோம். முற்பிறப்பில் செய்த வினைப் பயனை இப்பிறப்பில் உயிர் அனுபவித்து விடுகிறது ; ஊழும் முடிந்து விடுகிறது. பின் மறு பிறப்புக்கு தேவையான வினை ஏது என்பது ஒரு நியாயமான கோள்வி. அதற்குச் சிலர் கீழ்க்கண்டவாறு சமாதானம் கூறுகிருர்கள். ஒரு உயிர் உலக வியாபாரங்களில் ஈடுபடும்போது தான் ஊழினுல் தூண்டப்பட்டு, ஊழின் கருவியாக அத்தொழில்களைச் செய்வதாக எண்ணுமல், தான் தன் இஷ்டப்படி புதிதாக செய்வதாக நினைப்பதால் அவ்வாணவத்தின் காரணமாக அப்பிறப்பில் செய்த வினைகளுக்கும் அவ்வுயிர் பொறுப்பேற்கிறது. ஆகையால் அவ்வினைகள் புது வினைகளாக பாவிக்கப்பட்டு, அடுத்த பிறப்புக்கு ஊழாக ஆக்கப்படுகிறது. இம்மாதிரியே மேலும் மேலும் பிறவிகளும், ஊழும் வளர்ந்து கொண்டேபோக இடமுண்டாகின்றது என்று சொல்லுகிருர்கள். இந்த சமாதானம் உண்மையாக இருந்தால், அந்த நிலைமை எவ்வளவு கொடுமையானது என்று பாருங்கள். விதியால் செய்கிறேன் ; என்னை விதி தான் தூண்டுகிறது என்று மனத்தால் நினைத்துக் கொண்டு வினை செய்யாவிட்டால், அவ்வுயிர் ஒரு காலத்தில் செய்த வினைக்கு மீட்டும், மீட்டும் பிறவிகள் தோறும் தண்டனையா ? அவ்வினை புண்ணியமாயிருந்தால் மீண்டும், மீண்டும் லாபமா ? மேற்படி சமாதானம் சரியென்றே வைத்துக்கொண்டு பார்ப்போம். விதிக்கொள்கை எத்

தனையோ நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக இருந்து வரும் இந்நாட்டிலே கஷ்டப்படும் எல்லா மனிதர்களும் 'நம்மால் ஒன்றும் ஆவதில்லை ; எல்லாம் விதிப்படிதான் நடக்கும்' என்று தானே ஓயாமல் சொல்லிக்கொள்ளுகிறார்கள் ! சாதகம் பார்ப்பதும், ரேகை பார்ப்பதும், சாந்தி அல்லது பரிகாரம் செய்வதும், பாவத்தைப் போக்கிக்கொள்ள தீர்த்த யாத்திரை செய்வதும், புண்ணிய க்ஷேத்திரங்களுக்குச் செல்வதும் அவர்கள் விதிக்கொள்கையை மனதார நம்புகிறார்கள் என்பதை நிரூபிக்கவில்லையா ? இப்படி நம்புகிறவர்களுக்கு மேற்படி சமாதானத்தில் கண்ட நியாயப்படி மறு பிறப்புக்கு ஊழ் எங்கிருந்து வரும் ? அப்படியிருக்க இந்நாட்டிலே துன்பம் பெருகிவருவதற்கு என்ன காரணம் ?

எந்தக் காரியத்தைச் செய்தாலும் அது பாவமா, புண்ணியமா என்று தீர்மானிப்பது கஷ்டமாயிருப்பதால் பெருமுயற்சிகளில் ஈடுபடாமல் எளிதாக, வாழ்நாளை அஹிம்சை முறையில் கழித்து விடுவோம் என்று நினைத்து ஒருவன் பொழுதுபோக்கினாலும் அவனையும் ஊழ் விடுவதில்லையாம். ஒவ்வொருவனுக்கும் கடமை ஏற்பட்டிருக்கிறதாம் ; அதைச் செய்தே தீரவேண்டுமாம். கடமையைச் செய்யாவிட்டால் பாவம் உண்டாகுமாம். அந்தக் கடமை பிறவியினால் உண்டானதாம். வேடனாய் பிறந்த ஒருவனுக்கு புள், விலங்குகளை பிடிப்பதும் கொல்வதும் கடமை; கொள்ளைக்காரன் மகனுக்கு கொள்ளையடிப்பது கடமை; கசாய்க்கடைக் காரனுக்கு உயிர்களைக்கொன்று விற்பது கடமை ; போர்ச் சாதியான் ஒருவனுக்கு போரில் கொல்வது கடமை. போர் வீரனுங்கூட ஒரு நாள் சிந்திக்கத் தலைபட்டு, நான் இது காறும் கொன்றதுபோதும் ; இனி

யாவது இந்தொழிலைவிட்டு விடுவோம் என்று நினைத்து போர்க்கருவிகளை கீழே எறிந்துவிட்டு புறப்பட்டால் அச் சமயம் தேவர்கள்கூட அவன்முன் தோன்றி கடமையைச் செய்யென்று உபதேசித்து மறுபடியும் போருக்கு அவனை ஊக்கிவிடுவார்கள் என்றும் மக்கள் நம்புகிறார்கள்.

இவ்வளவு முக்கியமானதும், ஒதுக்கக்கூடாததுமான கடமை என்னவென்பதை எந்த உயிருக்காவது இயற்கையான முறையில் ஊழ் உணரவைத்திருக்கிறதா என்பதை கவனிக்கவேண்டும். அப்படி உணரப்படாத கடமையின்படி நடக்க யாரால் முடியும்? இதில் என்ன நேர்மை இருக்கிறதென்று கவனிக்க வேண்டும். கடமை எது என்று கண்டு பிடிக்க பெரிய அறிவாளிகளாலும்கூட எத்தனையோ சந்தர்ப்பங்களில் முடியவில்லையென்றால், சாமானிய மனிதர்கள் கடமையைப்பற்றி எப்படித்தெரிந்து கொள்ள முடியும்?

ஊழைக் காட்டிலும் வலிபொருந்திய சக்தி ஒன்றும் இல்லை யென்றும், மற்றசக்திகளையும் ஊழ் அமுக்கிவிட வல்லதென்றும், மனிதர்களில் அறிவிற் சிறந்தவர்களையும் அது ஆட்டிவைக்கிறதென்றும் சொல்லப்படுகிறது. ஊழ் நிறைவேறுவதற்காக எல்லா சூழ் நிலைகளையும் தானே உண்டாக்கிக் கொள்ளுகிறது. இதுமட்டுமன்று. முயற்சிக்கும் ஊழ்தான் காரணமாம். நல்ல ஊழ் இருந்தால் முயற்சியை உண்டாக்குமாம்; கெட்ட ஊழ் இருந்தால் சோம்பலை உண்டாக்குமாம். இப்படி எல்லாவற்றுக்கும் ஊழே காரணமாக இருக்கும்போது மனிதனை தண்டிப்பது நியாயமா?

நல்வினை தீவினைகளை அளவிடுவது சாத்தியமல்லவென்றும், தண்டனையை நிர்ணயிப்பதும் சாத்திமில்லையென்றும்

மேலே விவரிக்கப்பட்டிருக்கிறது. இனி தண்டனையை நிறைவேற்றுவது சாத்தியமா என்பதைப் பார்ப்போம். ஊழின் தன்மையைப் பார்த்தால் மனம், அறிவு நியாய உணர்ச்சி முதலிய உள்ள ஒரு பொருள் ஊழுக்கு தலைமை பெற்றிருக்கவேண்டுமென்று ஏற்படுகிறது. அப்படிப்பட்ட ஒரு பொருள் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, ஊழின் தீர்ப்பு மனிதன்மண்டையோட்டில் எழுதப்பட்டிருந்தாலும் சரி அல்லது அவன் தலைக்குமேல் அந்தரத்தில் தொங்கிக்கொண்டிருந்தாலும் சரி, அந்தத்தீர்ப்பு நிறைவேற்றப்படவேண்டியதாகிறது. இப்படி நிறைவேற்றி வைப்பதில் ஊழுக்கு தாங்கமுடியாத வேலை இருக்கவேண்டும். உதாரணமாக, ஒருவன் பிச்சை வாங்கவேண்டும்; ஊரெல்லாம் சுற்றி அலையவேண்டும்; அலைந்தாலும் அரைவயிற்றுச் சோறுகூட அவனுக்கு கிடைக்காமல் போக வேண்டும் என்று ஊழ் இருப்பதாக வைத்துக்கொள்வோம். அவன் தினமும் பிச்சைக்குப் புறப்படும்போது விதியும் உடனே கூடப்புறப்படவேண்டும்; பிச்சை கிடைக்கக்கூடாத மார்க்கங்களில் அவன் போகும்படி அவன் மனதை நடத்தவேண்டும்; கொடுக்கும் சுபாவம் உள்ளவர்களை அவன் அணுகிவிட்டால் கொடுக்கும் மனமில்லாதவர்களாக அவர்களை செய்யவேண்டும்; அல்லது அவர்கள் பையில் சில்லரை இல்லாதபடி ஏற்கனவே செய்திருக்கவேண்டும்; ஒரு சத்திரத்திற்கு அவன் சென்றால் அங்கே இவனுக்கு உணவு கிடைக்காதபடி வேண்டிய ஏற்பாட்டை செய்யவேண்டும்; ஒருக்கால் உணவு கிடைத்துவிட்டாலும், ஒரு நாயைப்பிடித்து கொண்டுவந்து விட்டு, அவனை கவனகுறைவாகயிருக்கும்படி செய்து, நாய் உணவைத் தின்றுபோகும்படி செய்யவேண்டும். இது மட்டுமா! அது அன்றுதினம் திருடி தின்னவேண்டிய விதியுடைய நாயாக இருக்கக்கூடாது. பிச்சை கிடைப்பது தூல

பமாயிருக்கிறதே, கூலி வேலை செய்து பிழைப்போம் என்று அவன் நினைத்து முயற்சி செய்தால் அம் முயற்சி பலிக்காத படி அவனுக்கு எல்லாவிதமான இடைஞ்சலையும் செய்து, வேலை கிடைத்தாலும் கூலி கிடைக்காதபடி செய்து, அவன் மறுபடியும் பிச்சைச் சட்டியையே தூக்கிக் கொண்டு அலை யும்படி செய்யவேண்டும். இது என்ன கஷ்டம் பாருங்கள். இது மட்டுமா! எவ்வளவோ அருவருக்கத்தக்கதும், வெட் கக்கேடானதும், மனத்தால் நினைக்கவும் தகாததுமான காரியங்கள் தினந்தோறும் நடைபெற்று வருகின்றன. ஊழ் தான் அக்காரியங்கள் நடைபெறுவதற்கு வேண்டிய சூழ் நிலைகளை உண்டாக்கி, ஆரம்ப முதல் கடைசிவரை நடத்தி வைக்கவேண்டும். இப்படியிருக்குமென்று நம்பத்தான் வேண்டுமா?

ஊழை நம்புவதற்கு இடைஞ்சலாயிருக்கும் காரணங் கள் இன்னும் எவ்வளவோ இருக்கின்றன. அவற்றை யெல் லாம் இங்கே விவரித்துக்கொண்டு போவது அவசியமல்ல. ஊழின் அஸ்திவாரம் பெரும்பாலும் மதத்தில் அமைக்கப் பட்டிருக்கிறது. ஆகையால் மதத்தொடர்புள்ள சிலகாரணங் களைப்பற்றி பேசாதிருப்பது நலம். மதத்தை தாக்குவதும், கிளர்ச்சியை உண்டாக்குவதும் நம் நோக்க மல்ல; அழுத்த மான மதவாதிகளையும் சிந்திக்கவைக்க வேண்டுமென்பதே நோக்கம். ஆகையால் எந்தமதப் பெயரையும், எந்தத் தெய்வப் பெயரையும், எந்த நூற் பெயரையும், எந்த ஆசிரி யர் பெயரையும், எந்தத்தத்துவ ஞானி பெயரையும் இதில் குறிக்கவில்லை. சாதாரணமான பொது அறிவுடைய மனிதர் கள், அனுபவஞானத்தைக்கொண்டு முக்யமான பெரிய அம் சங்களை கவனித்தாலே போதுமானது. கற்பனை முறையில் உள்ள சட்டமானது நடைமுறையில் எப்படி அமுலுக்கு

வருகிறது; அமுலுக்குவர அதற்கு என்னென்ன அவயவங்கள் வேண்டும், என்று கவனிக்கக்கூடிய விவேகம் இருந்தால் ஊழ்க் கொள்கையின் தன்மை தெரிந்துவிடும்.

ஊழ் எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளாக தன் ஆட்சியை நடத்தி வருகிறது; அப்படியிருந்தும் குற்றங்கள் குறையவில்லை, குற்றம் செய்வோரின் தொகை குறையவில்லை. இதற்கு மாருக புது குற்றங்களும், புது முறைகளில் பழைய குற்றங்களும் மலிந்துவிட்டன. குற்றங்களை தடுத்து நிறுத்துவதும், குறைப்பதுமே தண்டனையின் நோக்கம். அப்படியிருக்க ஒப்புயர்வற்ற பலம் பொருந்திய ஊழின் நிர்வாகத்தில் ஏன் இந்த நிலை ஏற்படவேண்டும்? ஊழைக்காட்டிலும் எத்தனையோ வகையில் பலம் குறைந்த, சூக்ஷ்மத் தன்மை குறைந்த அரசாங்க சட்டங்களே எவ்வளவோ நல்ல நிலைமையையும், அமைதியையும் மிகச் சிறிய காலத்துக்குள் உண்டாக்கியிருக்கின்றன என்பதை உலக சரித்திரம் காட்டுகிறது. ஒரு மனிதன் தான் செய்த பிசகையும் அதற்கு கொடுக்கப்பட்ட தண்டனையையும் அறிந்தால் அவன் திருந்துவதன்றி பிறரும் திருந்த ஏதுவாகும். இப்பிறப்பில் குற்றம் செய்தறியாத ஒருவன் கஷ்டத்தையே அனுபவித்துக்கொண்டு வந்தால் என்னவிதமான மனவேதனைக்காளாவான் என்பதை யாவரும் அறிவார்கள். தண்டனையைத் தவிற இந்த வேதனையையும் ஊழ் உண்டாக்குவது நேர்மையா?

ஒரு மனிதனுடைய மனம், அறிவு, குணம் எல்லாம் முன் ஜன்ம வாசனை என்கிருர்கள். பணக்காரனுக இருப்பவன் முன் ஜன்மத்தில் புண்ணியம் செய்தவன் என்றும், ஏழையாயிருப்பவன் பாவம் செய்தவன் என்றும் சொல்லுகிருர்கள். பெரும்பாலும் பணக்காரர்கள் ஈவிரக்கமற்ற

114009

வர்களாயும், ஆழ்ந்த வஞ்சகர்களாயும் பாவத்துக்கு அஞ்சாதவர்களாயும் அற்பகுண முடையவர்களாயும் காணப்படுகிறார்கள். முன் ஜன்மத்திலும், அனேகமாக இதை ஒத்த மனம்தான் அவர்களுக்கு இருந்திருக்க வேண்டும். அப்படியிருக்க, அவர்கள் என்ன புண்ணியத்தைச் செய்து மூட்டை கட்டிக்கொண்டு வந்திருக்க முடியும்? பணம் மிகவும் படைத்த இப்பிறவியிலேயே அவர்கள் ஒரு நன்மையும் செய்யக்காணோமே! ஆகையால் புண்ணியத்தால் பணம் வந்திருக்கிறது என்று சொல்ல முடியுமா? இதேபோல் ஏழைகளைப் பார்த்தால் பெரும்பாலும் பாவத்துக்குப் பயந்தவர்களாயும், ஒழுக்கமும் பயமும் உடையவர்களாகவும், உபகாரம் செய்யும் உணர்ச்சி உள்ளவர்களாகவும் இருப்பதைப் பார்க்கிறோம். முன் ஜன்மத்திலும் கிட்டத்தட்ட இதே மனப்பான்மைதான் அவர்களுக்கு அமைந்திருக்கவேண்டும். அப்படியிருக்க அவர்கள் என்ன கொடிய தீவினையைச் செய்து பாவ மூட்டையைக் கட்டிக்கொண்டு வந்திருக்கமுடியும்? ஆகையால் வறுமைக்குப் பாவம் காரணம் என்று சொல்ல இடம் இருக்கிறதா? முதிர்ந்த உலக அனுபவம் உள்ளவர்களுக்கு இவ்வுண்மை நன்றாய் விளங்கும்? பல்லக்குத் தூக்குபவன் பாவியென்றும், பல்லக்கேறுபவன் புண்ணியவான் என்றும் நம்பிவிடமாட்டார்கள். ஊழை நம்பாவிட்டால் வேறு எதை நம்புவது? மனிதர்களின் தன்மை, நிலைமை முதலியவற்றுள் வித்தியாசங்கள் இருப்பதற்கு காரணம் வேண்டுமே என்று பலர் கேட்கலாம். இவ்வித்தியாசங்களுக்கு காரணம் நன்றாகத் தெரிகிறது. சிலர் லாபகரமான தொழில் செய்து லாபமடைந்து பணக்காரராகிறார்கள்; சிலர் தொழில் செய்யவேண்டிய மூலதனம் முதலிய வசதிகள் இல்லாமல் ஏழையாயிருக்கிறார்கள். ஆபாசம் நிறைந்த

R34

இடங்களில் வசிப்பவர்களில் பெரும்பாலோர் நோயால் கஷ்டப்படுகிறார்கள்; நல்ல காற்றோட்டம், சுத்தம் நிறைந்த இடங்களில் இருப்பவர்களில் பெரும்பாலோர் நல்ல ஆரோக்கியத்துடனிருக்கிறார்கள்; ஆபாசமான இடங்கள் சுத்தப்படுத்தப்பட்டு நிலைமை மாற்றப்பட்டால் அவ்விடத்தில் வியாதி குறைகிறது. புஷ்டியான ஆகாரத்தைச் சாப்பிட்டு சரியான தேகாப்பியாசம் செய்கிறவர்கள் பலவான்களாக இருக்கிறார்கள்; இரண்டும் சரிவர இல்லாதவர்கள் பலவீனர்களாக இருக்கிறார்கள். நல்ல சூழ் நிலையில் அக்கரையுடன் வளர்க்கப்படும் குழந்தைகள் நல்ல குணமுடைய மனிதர்களாகிறார்கள்; கவனிப்பின்றி தீய சூழ் நிலையில் வளரும் குழந்தைகள் கெட்ட மனிதர்களாகிறார்கள். குணங்கள், அறிவு, வியாதி, முதலியவற்றுள் அனேகம் தாய் தந்தையரின் நிலையை ஒத்து ஏற்படுகிறது, என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்லுகிறார்கள். இப்படிக் கூர்ந்து கவனித்தால் மனிதருக்கு ஏற்படும் நலந் தீங்குகளுக்கு நேரிடையான காரணங்கள் நிச்சயமாக இருப்பதை தெரிந்து கொள்ளலாம். இந்தக் காரணங்களைத் தவிர வேறு மறைவான காரணங்கள் இருக்கின்றனவா என்று ஆராயவேண்டிய அவசியம் இருப்பதாய் தெரியவில்லை. ஏதோ காரணம் இருக்கலாமென்று வைத்துக் கொண்டாலும், அதைக்கண்டு பிடித்து விட்டதாகவும், அதுதான் ஊழ் என்றும் சிலர் சொல்வது ஆச்சர்யத்தை உண்டாக்குகிறது. உலகத்தில் மனிதன் இதுவரை கண்டு பிடித்த உண்மைகள் மிகவும் சொற்பம். எவ்வளவோ சிறிய விஷயங்களுக்கு கூட இன்றும் காரணம் கண்டுபிடிக்கப்படவில்லை. உண்மைக்காரணம் கண்டுபிடிக்கப்பட்டால் உலக முழுதும் ஆக்ஷேபணையின்றி அதை ஒப்புக்கொண்டு விடும். சூரியன் குதிரைகள் பூட்டப்பட்ட தேரேறி உல

யைச் சுற்றி வருவதாக நம்பியவர்கள், பூமிதான் சூரியனை சுற்றி வருகிறதென்று கண்டுபிடிக்கப்பட்ட உண்மையை ஒப்புக்கொண்டுவிட்டார்கள்; பண்டைய நூற் கருத்து களுக்கு முரணாயிருந்தும் ஒப்புக்கொண்டுவிட்டார்கள்; அம்மை, காலரா முதலிய நோய்களுக்கு ஏதோ ஒரு தெய்வத்தின் கோபம் காரணம் என்று நம்பியவர்கள் கிருமிகள் தான் காரணம் என்று கண்டு பிடிக்கப்பட்ட உண்மையை ஏற்றுக்கொண்டுவிட்டார்கள்; அரசாங்கமும் ஒப்புக் கொண்டு அவ்வியாதிகளினின்றும் பாதுகாப்புக்கு ஏற்பாடும் செய்திருக்கிறது. கணிதத்திலும் விஞ்ஞானத்திலும் கண்டுபிடிக்கப்பட்ட எத்தனையோ உண்மைகளை உலகம் அப்படியே ஒப்புக்கொண்டு, அவைகளை தனக்குப் பயன் படுத்திக்கொண்டும் வருகிறது. உண்மையான காரணங் களானால் அதை யாரும் மறுக்கமுடியாது; உண்மையின் பலம் அவ்வளவு அதிகம். அப்படிப்பட்ட உண்மைகளை யாரும் மறுத்தால் வேறு யாருக்கும் கோபமோ ஆத்திரமோ உண்டாவதில்லை. உண்மை அவர்களுடைய சொந்த சொத்தல்ல; உண்மை மறுக்கப்பட்டால் அவர் களுக்கு ஒரு வித நஷ்டமும் இல்லை; உண்மையை உணராமல் மறுப்பவன்தான் உண்மையில் நஷ்டமடைபவன். ஆகையால் யாரேனும் விளங்கிய உண்மையை மறுத்தால், அதை கேட்பவர்களுக்கு சிறிது ஆச்சர்யம் கலந்த புன்னகை தான் உண்டாகுமே தவிற கோபம் உண்டாவதில்லை. ஆனால் ஒரு கொள்கை இப்படிப் பட்டதல்ல; கொள்கை, முற்றிலும் உண்மையென்று உத்திரவாதம் செய்யமுடியாது; கொள்கை மனிதரின் நம்பும் சுபாவத்தை ஆதாரமாகக்கொண்டு நிற்கிறது, உலகம் முழுவதிலும் ஒரே வகையான கணித நூல் தான் இருக்கிறது; ஒரே விதமான பூகோள நூல் தான் இருக்கிறது: ஒரே

விதமான ரசாயன நூல் தான் இருக்கிறது; ஒரே வித மான விஞ்ஞான நூல்கள் தான் இருக்கின்றன; ஏனென்ருல் அவைகள் உண்மையை ஆதாரமாய்க் கொண்டவை. ஆனல் கொள்கைகளோ அப்படியில்லை. ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு கொள்கை, ஒவ்வொரு மதம், ஒவ்வொரு நம்பிக்கை இருந்துவருகின்றன. எந்தவிதமான சோதனைக்கும், எந்தவிதமான ஆராய்ச்சிக்கும், எந்தவிதமானகேள்விக்கும், உண்மை நிலைத்து நிற்கும். கொள்கையோ கேள்வி தாங்காது. ஆகையால்தான் சில கொள்கையில் அக்கறை உள்ளவர்கள், கொள்கை ஆராயப்படுவதை வெறுக்கிருர்கள், ஆத்திர மடைகிருர்கள். கொள்கைகளில் சில மக்களின் அறிவின்மையில் உண்டானவை; சில வஞ்சகர் சூழ்ச்சியால் உண்டானவை; சில நீண்ட பழக்கத்தால் உண்டானவை. ஆகையால் கொள்கையைப்பற்றி அறிவுடையோர் மிகுந்த கவனம் செலுத்தவேண்டும்

ஊழ்க் கொள்கை ஒரு உண்மையாக திகழ வேண்டுமானல், மேலே சொல்லப்பட்ட சந்தேகங்களுக்கு இடமிருக்கலாகாது. மனிதர் நிலையில் உள்ள வித்தியாசங்களுக்கு கண்கூடாகத் தோன்றும் காரணங்களைத்தவிர வேறு காரணங்கள் இருந்தால் அவற்றை வருங்கால அறிவாளிகள் கண்டுபிடித்து பலவிதமான நியாயங்களாலும், ருஜுக்களாலும் நிலை நாட்டலாம். அப்படிப்பட்ட சமயத்தில், உலகமக்கள் எல்லாரும், மற்ற உண்மைகளைப்போல, அவ்வுண்மைக் காரணங்களையும் ஒப்புக்கொண்டு விடுவார்கள். அதுவரை மனிதவர்க்கம் காத்திருக்கவேண்டியதுதான். இடையில் நாங்கள்காரணத்தை கண்டு பிடித்துவிட்டோம்; 'ஊழ்'தான் அக்காரணம் என்று யாரும் சொல்வார்களானல் அவர்களை நாம் பாராட்டுவதற்கு இடமில்லை; அவர் திணிக்கும் கொள்

மையாகிய சுமையை ஏற்றுக்கொள்ளவும் முடியாது. உலகிற் பிறந்த யாவரும் தாமறிந்தோ அறியாமலோ பிற உயிர்களுக்கு துன்பம் விளைவிக்காமல் உயிர் வாழ்ந்திருக்க முடியாத படிதான் இயற்கை அமைந்திருக்கிறது என்பது யாவரும் அறிந்த உண்மை அப்படியிருக்க மனிதனிடம் குற்றம் இருப்பது ஆச்சரியம் ஒன்றும் இல்லை. இதோடுமட்டுமல்லா மல், மனிதன் ஊழால் தூண்டப்பட்டுத்தான் செயலாற்று கிறான். குற்றம் செய்யும்போது அவனைத் தடுக்காமல், அவனை தானே தூண்டிவிட்டு, செய்தேஆகவேண்டும் என்று அவனுக்கு மீற முடியாத விதியையும் ஏற்படுத்தி, அவன் வினை செய்த பிறகு எந்த நியாய முறைக்கும் ஒவ்வாதபடி அவனையே தன்னிஷ்டம்போல் மறுபடியும், மறுபடியும் ஓயாமல் ஊழ் தண்டித்து வருகிறது என்று பலர் நம்பினால் அது வருந்தப்படத்தக்க நிலைமை யல்லவா!

ஊழின் தன்மையை மேலே விவரித்தபடி கவனித்தால் மனிதர் குற்றத்துக்கு முழுப் பொறுப்பும் ஊழின்மேல்தான் ஏறியிருக்கிறதென்பது தோன்றும். குற்றம் வெறுக்கப்பட் டால் அதை அதிகப்படுத்தி நிரந்தரமாக்கும் ஊழ்தான் ஆயி ரம் மடங்கு வெறுக்கப்படவேண்டும். குற்றத்திற்காக மனி தன் தண்டிக்கப்பட வேண்டுமானால் அதைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு ஊழ்தான் தண்டிக்கப்பட வேண்டுப்.

ஒரு காலத்தில் அரசர்கள் மிகச்சிறந்த குணங்களுள்ள வர்களாகவும், மக்கள் ஒழுக்கம் சீலம் உடையவர்களாகவும் வாழ்ந்தார்கள் என்றும், இப்பொழுது நிலைமை மிகவும் கெட்டுப்போய்விட்டதென்றும் பலரும் பேசுவதைத் தின மும் கேட்கிறோம் அப்படிப்பட்ட நல்ல நிலைமையிலிருந்து இப்பொழுதுள்ள கெட்ட நிலை எவ்வாறு உண்டாயிற்று? நன்மையிலிருந்து தீமை ஏற்படக் காரணம் என்ன ? உயிர்

களை உள்ளும் புறமும் கவனித்து நற் செயல் தீச்செயல் களை ஆய்ந்து, தீர்ப்புச் செய்து, தீர்ப்பை எல்லையற்ற சக்தி யால் நிறை வேற்றியும் வைத்து இடையறாது தொழில் செய்து ஊழ் இறுதியில் சாதித்தது இவ்வளவுதானா என்று பார்க்கும்போது பலருக்கு நகை வரும்.

ஊழ் என்ற ஒரு சக்தி யில்லை யென்று வைத்துக் கொண்டால் உலகின் நிலை என்னவிதமாக இருக்கும் என்ப தையும் சிறிது ஊகித்துப் பார்க்க வேண்டுகிறேன். ஊழால் தான் ஏற்ற வித்தியாசங்கள் ஏற்படுகிறதென்று ஊழ்க் கொள்கையாளரால் ஒப்புக்கொள்ளப் படுகிறபடியால், ஊழில்லாவிட்டால், மக்கள் செல்வம், வாய்ப்பு இவைகளில் வித்தியாசமற்றவர்களாக இருப்பார்கள். தீங்கும் நோயும் அவர்களை முன்னேற்பாட்டின்படி பின்தொடரா. இயற்கை யாக ஏற்படும் முயற்சி அதற்கேற்ற பலனைத்தரும். இக்காரணத்தால் மக்களுட் பகையும் கொடுமையும் இல்லாதிருக்கும். மக்கள் ஒருக்கால் குற்றம் செய்தாலும் அக்குற்றம் அத்துடன் ஒழியுமே யன்றி மீண்டும், மீண்டும் கிளைத்து உலகில் நிலையான இடம் பெறாது. இப்படிப்பட்ட நிலைதானே சிறந்ததென்று அறிஞர்கள் சொல்லுகிறார்கள். இம்மாதிரியான நல்ல நிலைமை ஏற்படாதிருக்கச்செய்ய இயற்கையில் ஒரு சக்தி ஊழ் என்ற பெயரால் இருக்க முடியுமா?

மண், மண்ணாயிருப்பதற்கும், கல், கல்லாயிருப்பதற் கும் ஊழ்தான் காரணமா? தண்ணீரற்ற வனாந்திரத்தில் நிற்கும் மரத்துக்கும், தோட்டத்தில் விரும்பி வளர்க்கப்படும் மரத்துக்கும் ஊழ் உண்டா? எச்சில் இலையைத் தேடித்திரி யும் நாய் பாவம் செய்ததா? கனவான் வீட்டில் பாலும் இறைச்சியும் சாப்பிட்டு கட்டிலில் படுக்கும் நாய் புண்ணி

யம் செய்ததா? இவைகளுக்கு புண்ணிய பாவ உணர்ச்சி உண்டா? இவைகளை ஊழ் தாக்க இடமிருக்கிறதா? அப்படி இருந்தும் அவைகளுள் பலவிதமான வேற்றுமையுள்ள நிலை இருப்பதைப்பார்க்கிறோம். ஆகையால் மனிதர் வாழ்வின் வித்தியாசங்களுக்கும். ஏற்றத் தாழ்வுகளுக்கும் ஊழ் ஒன்று தான் காரணமாக இருக்க முடியும் என்று எண்ண என்ன நியாயம் இருக்கிறது?

மனிதன் அறிவுள்ளவனாக இருப்பதால் அவன் வினைகள் கவனிக்கப்படவேண்டும். மிருகங்களையும் மனிதனையும் ஒரேவிதமாக பாவிக்கக் கூடாது என்று சிலர் நினைக்கிறார்கள் அப்படியானால் மனிதன் மிருகத்தைப்போல் வாழ்ந்து வந்த காலத்தில் அவனை ஊழ் பாதிக்கவில்லையா என்று கேட்கவேண்டியிருக்கிறது. எந்தக்காலத்துக்குப்பின் ஊழ் மனிதன்பேரில் கவனம் செலுத்த ஆரம்பித்தது என்று அவர்களைத்தான் கேட்க வேண்டும். ஒரு இயற்கைச்சட்டம் இப்படி இருக்க முடியுமா என்று சிந்திக்க வேண்டும்.

பெரிய அளவில் எடுத்துக்கொண்டு பார்த்தாலும், ஊழை நம்பிய நாடுகள் முயற்சியை நம்பிய நாடுகளைத்தான் நம்பி வாழ வேண்டிய நிலைமை இருக்கின்றதென்பதை உலக சரித்திரமும் அனுபவமும் காட்டுகின்றன. எல்லாத்துறைகளிலும் வியக்கும்படியான முன்னேற்றத்தை, அறிவு கலந்த முயற்சியுடைய நாடுகள் அடைந்திருக்கின்றன. இதை நன்றாய் தெரிந்து கொண்டு பலர் ஊழை நம்பிக்கொண்டு முன்னேற்றத்தை தடைபடுத்துவது மகிழ்ச்சிக்குறிய நிலைமையல்ல. இக்கட்டுரையில் கூறப்பட்ட விவரங்களைப்பற்றி அவர்கள் சிறிது சிந்தித்தால், உலகம் முழுவதும் ஒப்புக்கொள்ளக் கூடிய உண்மையாக ஊழ் இருக்க முடியாது என்றும், அது ஒரு கொள்கைதான் என்றும், தீர்மானிக்கக் கூடும்.

எல்லையற்ற ஆற்றலும் நடுவு நிலைமையும், ஆக்கும் தன்மையும் உடையதென்று சொல்லப்படும் ஊழ், தீவினைகள் விளைவதற்கு அடிப்படையான மனிதன் மனத்தை குற்றமற்றதாக அமைப்பதில் ஏன் முயலவில்லை? அப்படி அமைத்தால் உலகுக்கு நிலைத்த நன்மையுண்டு. அதைவிட்டு, மனத்தின் தூண்டுதலால் மனிதன் செய்யும் குற்றங்களுக்காக ஊழ், தன்னுடைய துணைச்சக்திகளாகிய நோய், வறுமை, இழிவு முதலியவைகளின் உதவியைக் கொண்டு, நேர்மையற்றமுறையில் மனிதனை தண்டிப்பதில் என்னபயன்? அத்தண்டனைகளால் குற்றங்கள் குறையப் போவதும் இல்லை. உலகம் முன்னேறப் போவதும் இல்லை. விரைவாக முன்னேறி வரும் உலகம் இக் கொள்கையை ஒப்புக்கொள்வ இடமிருக்கிறதா? குற்றத்தை ஒழிப்பதா? குற்றம் செய்பவரை ஒழிப்பதா?

114009

பாரதி அச்சகம், குடந்தை.

பிரதிகளுக்கு கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும்.

C. ராஜம்மாள்

1319, வடக்கு ராஜவீதி, புதுக்கோட்டை.

(திருச்சி ஜில்லா.)